<u>செய்தி வெளியீடு எண். 466</u> <u>நாள். 21.6.2008</u>

வேளாண்மை ஆணையர் அலுவலம், சேப்பாக்கம், சென்னை 5
தமிழகத்தில் உரங்கள் இருப்பு குறித்த பத்திரிக்கை செய்தி

## பத்திரிக்கைச் செய்தி

மேட்டூர் அணை இந்த ஆண்டில் ஜுன் 12ம் அன்று திறந்து விடப்பட்டது, மேலும், தமிழகத்தில் உள்ள அணைத்து முக்கிய நீர் தேக்கங்களிலும் போதிய நீர் இருப்பு உள்ளதால், விவசாயிகள் குறுவை சாகுபடியினை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இச்சூழ் நிலையில், விவசாயிகளுக்கு தரமான விதை, உரம் போன்ற இடுபொருட்களை வழங்குவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இச்சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, உழவர் பெருமக்களுக்கு உரிய நேரத்தில் தரமான தேவையான உரங்களை விநியோகம் செய்திடுவதை உறுதி செய்திடும் பொருட்டு, வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண் துறை அரசுச் செயலாளர் ஜுன் 14–ஆம் தேதி உர உற்பத்தியாளர்கள், டெல்டா மாவட்ட வேளாண் அதிகாரிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகளுடன் உர இருப்பு மற்றும் விநியோகம் குறித்த சிறப்பு கூட்டத்தினை நடத்தினார். இக்கூட்டத்தில் உர உற்பத்தியாளர்களை துறைமுகத்தில் இருப்பிலுள்ள டி.ஏ.பி. உரத்தினை உடனடியாக மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இவ்வாறு மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் உரங்களை தங்கள் மாவட்டத்திற்கு வந்து சேருவதை வேளாண் அதிகாரிகள் நாள்தோறும் தவறாமல் கண்காணிக்கவும் அறிவுறுத்தினார்.

டி.ஏ.பி. உரத்தினை பொருத்தவரையில் ஜுன் 2008 மாதத்திற்கு தேவையான 30,000 மெ.டன்னிற்கு போதுமான அளவு இருப்பில் வைக்கப்பட்டு, 19.06.2008 வரை 22,456 மெ.டன் டி.ஏ.பி. உரம் விநியோகம் செய்யப்பட்டு, தற்போது துறைமுகத்தில் இருப்பில் உள்ள 28,390 மெ.டன்களும் மாவட்டங்களுக்கு விரைந்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண் துறை அரசுச் செயலாளர் அவர்கள் டான்பெட் நிறுவன அலுவலர்களை தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலும் அப்பகுதிக்கு தேவையான உரங்களை போதுமான அளவு இருப்பு வைக்கவும், அதன் விலை மற்றும் இருப்பு விவரங்கள் பற்றிய தகவல் பலகை வைக்கவும் அறிவுறுத்தினார்.

மாநில மற்றும் மாவட்ட அளவில் உர இருப்பு குறித்து கண்காணிக்க சிறப்பு கண்காணிப்பு பிரிவு இயங்கி வருகிறது. மாவட்ட கண்காணிப்பு பிரிவுகளின் தொலைபேசி எண்கள் அனைத்து நாளேடுகளிலும் பிரசுரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் உரங்கள் இருப்பு குறித்த தங்கள் குறைகளை மாவட்ட கண்காணிப்பு பிரிவுகளை தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், உரங்கள் தொடர்பான புகார்கள் பெறப்பட்டால், சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ( தரக்கட்டுபாடு ) போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு, தக்க நடவடிக்கை மேற்கொண்டு உடனடி தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**தமிழக அரசு ஜுலை 2008ம் மாதத்திற்கு தேவையான உரங்களை பெற மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, தமிழக வேளாண் துறை அலுவலர்கள் நமது விவசாயப் பெருமக்களுக்கு செம்மை நெல் சாகுபடியின் தொழில்நுட்பங்களை தெள்ளத் தெளிவாக விளக்கவும் சமச்சீர் உரம் இடுவதை கடைபிடிக்கவும், குறைந்த செலவில் நிறைவான மகசூலை பெறவும் வழிவகை செய்யுமாறும் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண் துறை அரசுச் செயலாளர் கேட்டுக் கொண்டார்.**

**வேளாண் ஆணையருக்காக**

........................................................................

<u>வெளியீடு</u> : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9